முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1454

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.09.2023**, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்கார பரபிரம்மமே
ஓங்காரக்குடில் படைத்தருளுகின்ற
ஓங்காரன் என் அவதாரமே அரங்கனே உந்தனுக்கு
2. உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
உரைத்திடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 05 ம் நாள், 22.09.2023, வெள்ளிக்கிழமை)
சிந்தை வைத்து அரங்கன் உன் திருவடி
செப்பிடுவேன் பற்றிவரும் மக்களுக்கே
3. மக்களுக்கு மரணமில்லா பெருவாழ்வு
மறுமையை வெல்லுகின்ற ஞானவாழ்வு
ஆறுமுகன் என்னருளால் வாய்க்கக்கூடும்
அரங்கனுக்கு ஆற்றல்பல தந்து ஆறுமுகன் யான்
4. அரங்கனோடு கலந்து இணைந்து அற்புதம் நடத்திவர
வருகவே ஓங்காரக்குடில் தொடர்பு வளமாக்கும் வருவோரை அச்சமற
தருகின்ற குணம்படைத்து தர்மவானாய்
தரணியில் ஞானவானாய் சிறக்க
5. சிறக்கவே அற்புதம் நிகழ்த்தும்
செப்பிடுவேன் இந்த பேராற்றலை
அரங்கன்வழி தீட்சையாக அரங்கன்வழி ஆசியாக
ஆறுமுகன் யான் நடத்தி வர
6. வருகவே உலகுக்கு அரங்கன் அவதாரம் பேரற்புதம்
வல்லமைபட இந்த உலகை மாற்றும் நிகழ்வுக்கே
அரங்கன் அவதாரம் எடுத்துள்ளபடியால்
ஆதலால் அரங்கனோடு ஆறுமுகன் யான்

7. நீக்கமற இணைந்து நிற்க
எந்தன் சக்திபெற எந்தன் காட்சிபெற
விரும்பும் உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி
அரங்கமகான் தரிசனம் கண்டால் போதும்

8. அவர்கட்கெல்லாம் அற்புதம்
ஆறுமுகன் என் சூட்சுமமாக நிகழ்த்தப்பட்டு
அழியாமை என்கின்ற மகா சக்தி கிட்ட நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–